# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- விஞ்ஞானம்**

சுட்டெண்:.......................   **தரம் - 09**   **நேரம் : 02 மணி**


## பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. உயிருள்ளவற்றிற்கும் உயிரற்றவற்றிற்கும் இடைப்பட்ட இயல்புகளைக் கொண்ட கூட்டமாக அமைவது?
    01. அல்கா   02. பற்றீரியா   03. வைரசு   04. பங்கசு

02. மனிதச் செவியினால் கேட்கக் கூடிய மீடிறன் வீச்சு?
    01. 20Hz - 200Hz   02. 20Hz - 20000Hz   03. 20Hz - 200000Hz   04. 200Hz - 2000Hz


03. சோடியம் என்ற மூலகத்தின் இலத்தீன் பெயராக அமைவது?
    01. நேற்றியம்   02. பெரம்   03. பிளம்பம்   04. அவுரம்

04. 


இங்கு விசையின் பருமன் குறிக்கப்படுவது?
    01. நேர்கோட்டில் குறிக்கப்பட்ட அம்புக்குறியின் திசையால்
    02. நேர்கோட்டில் குறிக்கப்பட்ட புள்ளியால்
    03. நேர்கோட்டின் நீளத்தால்
    04. நேர்கோட்டின் அகலத்தால்

05. அமுக்கம் $= \frac{\text{விளையுள் விசை}}{b}$

இங்கு b எனக் குறிக்கப்பட்ட இடத்தில் வருவது
    01. நீளம்   02. திணிவு   03. அடர்த்தி   04. மேற்பரப்பின் பரப்பளவு

06. 

இங்கு காட்டப்பட்டுள்ள நுண்ணங்கியாக அமைவது?
    01. பரமேசியம்   02. அமீபா   03. மதுவம்   04. வைரசு

07. தொலைவிலுள்ள பொருட்களைத் தெளிவாகப் பார்க்க முடியுமாயினும் அண்மையிலுள்ள பொருட்களைத் தெளிவாகப் பார்க்க முடியாமையை எவ்வாறு அழைப்பார்?
    01. சேய்மைப் பார்வை   02. இருவிழிப்பார்வை
    03. அண்மைப் பார்வை   04. முப்பரிமாணப்பார்வை

08. ${}^{35}_{17}Cl$ என்ற மூலகத்தில் உள்ள புரோத்தன்கள், நியூத்திரன்கள் முறையே
    01. 18, 18   02. 18, 17   03. 18, 19   04. 17, 18



kalvi.lk

09. விசை ஒரு காவிக்கணியம் எனப்படுவற்கான காணரம், விசைக்கு

01. அலகு காணப்படுவதால் ஆகும்

02. பருமன் காணப்படுவதால் ஆகும்

03. பருமனும், திசையும் காணப்படுவதால் ஆகும்.

04. பிரயோகப் புள்ளி காணப்படுவதால் ஆகும்.

10. அமுக்கத்தின் சர்வதேச அலகாக அமைவது?

01. $m^2$ 02. $kgm^{-3}$ 03. Nm 04. Pa

11. பின்வரும் கூட்டங்களுள் தனியே நுண்ணுயிர்க் கொல்லிகளைக் கொண்ட கூட்டமாகக் காணப்படுவது.

01. பெனிசிலின், அம்பிசிலின், போலியோ, எரித்திரோமைசின்

02. ஏற்புலலி, ஹெப்பற்றைற்றிஸ் ட, அம்பிசிலின், பெனிசிலின்

03. பெனிசிலின், அம்பிசிலின், எரித்திரோமைசின், கிறீசியோபுளூவின்

04. பெனிசிலின், போலியோ, அம்பிசிலின், எரித்திரோமைசின்

12. ஊத்தேக்கியாவின் குழாயின் தொழிற்பாடாக அமைவது?

01. உடலைச் சமனிலைப்படுத்துவதில் பங்களிப்புச் செய்யும்.


02. ஒலியை இனங்காண உதவும்.

03. ஒலியலைக்கு ஏற்றவாறு அதிரும்.

04. செவிப்பறை மென்சவ்வின் இருபக்கமும் அமுக்கத்தை ஒரேயளவிற் பேணுவதில் பங்களிப்புச் செய்யும்.

13. கல்சியங் காபனேற்றின் ஆக்கக்கூறு மூலங்களாக அமைவன.

01. Ca, C, O 02. C, H, O 03. Na, Cl 04. Ca, S, O

14. 


நீளம், அகலம், உயரம் என்பன முறையே 2m, 1m, 1m ஆகவுள்ள கனவுருவப் பெட்டியின் நிறை 600N. இப் பெட்டி கிடையாக நிலத்தில் வைக்கப்பட்டுள்ளது. எனின் மேற்பரப்பில் தொழிற்படும் அமுக்கத்தைக் குறிப்பிடுவது.

01. 100Pa 02. 250Pa 03. 300Pa 04. 500Pa

15. விற்தராசு மூலம் அளக்கப்படும் கணியமாக அமைவது?

01. விசை 02. அமுக்கம் 03. அடர்த்தி 04. திணிவு

16. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

a. புரத உணவுகள் அழுகலடைகின்றன.

b. உணவு மென்மையடைதல் பௌதிக மாற்றமாகும்.

c. இலிப்பிட் உணவு நொதிக்கின்றன.

d. உணவின் மணம் மாற்றமடைதல் இரசாயன மாற்றமாகும்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் உண்மையானவை?


01. aயும் bயும் 02. aயும் dயும் 03. bயும் cயும் 04. aயும் cயும்



kalvi.lk

17. மிகவும் பரந்த வீச்சுடனான இருவிழிப் பார்வை காணப்படும் விலங்காக அமைவது?

01. சிம்பன்சி 02. மனிதன் 03. நாய் 04. புலி

18. 


இங்கு காட்டப்பட்ட மூலக்கூறாக அமைவது?

01. $NH_3$ 02. HCl 03. $CH_4$ 04. $CO_2$

19. ஓய்விலுள்ள பொருளை இயங்கச் செய்யலாம். இயங்கும் பொருளை ஓய்வடையச் செய்யலாம். பொருளின் வடிவத்தை மாற்றலாம். போன்ற கூற்றுக்குப் பொருத்தமாக வரும் கணியம்?

01. அமுக்கம் 02. திணிவு 03. அடர்த்தி 04. விசை

20. சர்வதேச அளவுத்திட்டத்தில் $Nm^{-2}$ இற்கு வழங்கப்படும் வேறொரு பெயர்?

01. நியூட்டன் 02. யூல் 03. பஸ்கால் 04. வோல்ற்று

(20X2=40 புள்ளிகள்)

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.**

a.

| நுண்ணங்கிக்கூட்டம் | இயல்புகள் | உதாரணம் |
|---|---|---|
| பற்றீரியா | a. | c. |
| | b. | d. |
| பங்கசு | e. | g. |
| | f. | h. |
| புரட்டோசோவா | i. | k. |
| | j. | l. |

(12X½=6 புள்ளிகள்)

b. நைதரசன் பதித்தலில் பயன்படும் பற்றீரியா எது?

............................................................................................................ (2 புள்ளி)

c. பொன்நிற அரிசியில் காணப்படும் விற்றமின்?

............................................................................................................ (2 புள்ளி)

d. நுண்ணங்கிகளின் தீய விளைவுகள் 3 தருக.

............................................................................................................ (3 புள்ளி)

e. புரத உணவு, இலிப்பிட் உணவு பழுதடைதலை எவ்வாறு அழைப்பர்?


............................................................................................................ (2 புள்ளி)

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

**02.**




a. இங்கு காட்டப்பட்டுள்ள புலனங்கத்தில் a, b, c, d, e, f, எனக் குறிக்கப்பட்ட பகுதிகளை இனங்காண்க.

a : ............................................ b : ............................................

c : ............................................ d : ............................................

e : ............................................ f : ............................................ (3 புள்ளி)

b. g எனக் குறிக்கப்பட்ட பகுதியின் தொழிற்பாடு ஒன்று தருக.

........................................................................................................ (2 புள்ளி)

c. இப் புலனங்கத்தில் ஏற்படும் குறைபாடுகள் 2 உம் எவை?

........................................................................................................ (2 புள்ளி)

d. கதிராளி குறிக்கும் எழுத்தைக் குறிப்பிடுக.

........................................................................................................ (2 புள்ளி)

e. இருவிழிப் பார்வையை வேறு எவ்வாறு அழைப்பார்?

........................................................................................................ (2 புள்ளி)

f. கண்ணின் ஆரோக்கியத்தைப் பேணும் முறைகள் 2 தருக.

........................................................................................................

........................................................................................................ (2 புள்ளி)

g. கண்ணில் ஏற்படும் நோய்களில் தற்காலத்தில் பரவலாகக் காணப்படும் இரண்டு நோய்களும் எவை?

........................................................................................................ (2 புள்ளி)

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

**03. சடப்பொருட்களின் ஆக்க அலகு அணு என்பதை நாம் அறிவோம்.**

a. பின்வரும் மூலக்கூற்றின் குறியீடுகளைத் தருக.

1. ஒட்சிசன் :........................................... 2. ஐதரசன் :...........................................

3. புளோரீன் :........................................... 4. நைதரசன் :...........................................

(4 புள்ளிகள்)

b. நீர் மூலக்கூறு உருவாகும் விதத்தை வரைக.

(3 புள்ளிகள்)

c. Na, O, N இல் உள்ள புரோத்தன், நியூத்திரன்களின் எண்ணிக்கையைத் தருக.

| | புரோத்தன் | நியூத்திரன் |
|---|---|---|
| Na | | |
| O | | |
| N | | |

(6x½=3 புள்ளிகள்)

d. சேர்வைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

........................................... ........................................... ...........................................

(3 புள்ளிகள்)

e. கலவையின் இரு வகைகளும் எவை?

....................................................... .......................................................

(2 புள்ளிகள்)

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

**04. இழுத்தல் அல்லது தள்ளுதல் விசை என எளிமையாகக் குறிப்பிடலாம்.**

a. பின்வரும் திணிவுகளின் நிறைகளைக் காண்க.

1. 15kg : .....................................
2. 5kg : .....................................
3. 2kg : .....................................

(3 புள்ளிகள்)

b. விசை காவிக்கணியமா? எண்ணிக்கணியமா? காரணம் தருக.

..................................................................................................................................

..................................................................................................................................

(3 புள்ளிகள்)

c. பிரயோகப்புள்ளி என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

..................................................................................................................................

(2 புள்ளிகள்)

d. விசையுடனும் மேற்பரப்பின் பரப்பளவுடனும் தொடர்புபடும் கணியம் யாது?

..................................................................................................................................

(2 புள்ளிகள்)


e. மேற்கூறப்பட்ட கணியத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

..................................................................................................................................

..................................................................................................................................

(2 புள்ளிகள்)

f.




மேற்காட்டப்பட்ட உருக்களின் மேற்பரப்பளவில் தாக்கும் அமுக்கங்களின் பெறுமதியினை ஏறுவரிசைப்படுத்துக.
(பொருளின்நிறை : 36N)

(3 புள்ளிகள்)
**(15 புள்ளிகள்)**



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page